புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
June-2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS

# மூலிகை மருத்துவமும் அதன் பயன்களும்

ப.சிவகாமி
W/O R. நாகராசு, 6A சோழன் நகர்
ஆலடிக்குமுளை அஞ்சல்
பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் 614615

ஆய்வு சுருக்கம்:

இயற்கையாகக் கிடைக்கும் எண்ணற்ற மருத்துவ குணமுடைய செடிகளைக் கொண்டு பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவ முறையே மூலிகை மருத்துவம் எனப்படுகிறது. இந்த மூலிகை மருத்துவத்தை சித்த மருத்துவர்களும் மரபுவழி மருத்துவர்களும் அதிக அளவு பயன்படுத்தி வருகின்றனர் மூலிகைகளுக்கும் சித்தர்களுக்கும் எப்போதும் ஒரு வித மர்மம் தொடர்பு இருந்துக்கொண்டே இருக்கிறது. அதே போல தான் மூலிகைகளின் மகத்துவம் பற்றிய மர்மமும் இன்று வரை விலகவில்லை. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஒவ்வொரு மூலிகைகளுக்குள்ளும் எண்ணற்ற மருத்துவ தன்மைகள் மறைந்து உள்ளன. அவை அனைத்துமே நம்மை நீண்ட ஆயுளுடன் வைத்துக்கொள்ள உதவுகிறது. தமிழ் மருத்துவ தந்தையர் என அழைக்கப்படும். சித்தர்கன் நந்தி அகத்தியர் திருமூலம் வழியில் பதினென் சித்தர;கன் ஆராய்ந்து அறிவால் அறிந்து ஞானத்தால் இகபர சுகம் பெற இவ்வுடல் நிலைத்தல் பொருட்டு வகுத்தமார்க்கம் சித்த மருத்துவம்'; இச்சித்தமருத்துவமே 'உணவே மருந்து மருந்தே உணவு என்கிற கோட்பாடு கடைபிடிக்கப்படுகிறது. தாவரங்களில் மருத்துவம் மெய்ஞானம் சிந்திக்கும் வரையில் பொய்யான மெய்யை மெய்பித்திருக்கக் செய்தது சித்தர்கள் காயசித்தி கல்ப முறைகள் நோய் அணுகாது இருக்கவும் நோய் வந்தவுடன் நீக்கவும் மூலிகை, பாஷானம் இஉலோகம் ஆகியவற்றை சித்தர்கள் மருந்துகளாகப் பயன்படுத்தினர். இவற்றுள் முதல் நிலையில் மருத்துவ உபயோகம் கொண்டவை மூலிகைகள் ஆகும். இம்மூலிகைகள் மனிதர்களுக்கு மட்டுமில்லாமல் மிருகங்களாலும் பாதிக்கப்பட்டு வருவதும் கண்டறியப்பட்டுள்ளது. வயிற்றுக்கழிச்சல் ஒவ்வாமை போன்ற குறைபாடு ஏற்பட்டால் புலி பூனை போன்ற விலங்குகள் அருகம்புல்லை தின்று நோய் தீரும் வரை உபவாசம் இருப்பதாக அறிந்துள்ளனர். பாரம்பரிய மருத்துவ முறைகளாக மூலிகை மருவத்தில் தாவரங்களில் மருத்துவம் சித்தர;களின் நவபாசனம் வைத்திய முறைகள் மரம் செடி கொடி பட்டை வேர்களின் மருத்துவம் சைவஉணவின் மருத்துவம் ஊன் உணவின் மருத்துவம் நவீன மருத்துவத்தின் தாக்கமும் பின் விளைவுகளும் பழங்கால உணவு முறைகளும் இன்றைய உணவு முறைகளும் ஆராயப்பட்டுள்ளன.

முன்னுரை:

மனித இனத்தோடு உடன் தோன்றிய மருத்துவக்கலையானது நாகரிக வளர்ச்சியில் தனித்த இடம் பெற்றதொரு கலையாக வளர்ச்சி அடைந்து வளர்ந்து வருகின்றது.மனிதன் தோன்றிய காலத்திலேயே நோய் தோன்றியது எனலாம். அந்நோயினால் போக்க மருத்துவ கலை தோன்றியது. ஆதிமனிதன் உடல் நலக் குறைவிற்கான காரணங்களை அறிய முயன்றான் நோய்களில் இருந்து தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளும் விலங்குகளைக் கவனித்தான் இதன் பயனாக விலங்களிடமிருந்து மூலிகை மருத்துவ அறிவினைப் பெற்றான்.

இயற்கை நமக்கு அளித்திருக்கும் வரப்பிரசாதம் உயிர் காக்கும் பல அரிய மூலிகைகள் ஆகும். நம் நாட்டில் நோய்களைக் குணப்படுத்த மூலிகைகளை மக்கள் தொன்று தொட்டும் பயன்படுத்தி

வருகின்றனர் அவர;கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டதால் மூலிகைகளை உயிர்காக்கும் மருந்தாகப்போற்றி பாதுகாத்து வந்தனர் சித்தர்களும் முன்னோர்களும், மருத்துவர்களும் , அவற்றைப் பயன்படுத்தி மருந்துகளைப் தயாரித்து கொடிய வியாதிகளைக் கூட எளிதில் குணப்படுத்தினர்;. மருந்துகளின் பாதுகாப்பு அதன் வீரியம் ; பக்கவிளைவுகள் போன்றவற்றில் மிகுந்த கவனம் செலுத்தினர். இம்மருத்துவ பெயராலேயே சித்த மருத்துவம் என்று வழங்கப்படும் நாட்டுப்புறங்களில் இது கை வைத்தியம்இ பாட்டி வைத்தியம் என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

*ஆய்வு நெறிமுறைகள்:*

தாவர இனங்களில் மூலிகைகள் தலைசிறந்தவையாகும்.உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் தாவரங்களைச் சார்ந்து வாழ்ந்திருப்பதனைப்போல மருத்துவமுறைகள் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ மூலிகைகளைச் சார்ந்திருக்கின்றன.குறிப்பாக சித்த மருத்துவம் மூலிகைகளையே மூலப்பொருளாகக் கொண்டு இருக்கின்றது. இயற்கை வழி அமைந்த இலக்கியங்களும் , மருத்துவம் இயற்கைப் பொருளான மூலிகைகளின் குணநலன்களை அறிந்து, அவற்றின் பண்புனளையும் மருத்துவ குணங்களையும் தன்னுள் சேர்த்துக்கொண்டுள்ளன. மண்ணில் தோன்றிய பல்லாயிரக்கணக்கான தாவரங்கள் அனைத்தையும் மருத்துவம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அறிந்தவற்றைப் பயன்படுத்தக்கவை என்றுணர்ந்தவவைகளை மூலிகை என்றுப் பெயரிட்டு பயன்படுத்தி வருகின்றது.

'மூலி யக்கை மூவாயிரத்து என்னூ ரெனினுங்
குாலியின் வேகங கடற் சூழ்ந்த தகில காட்டகத்திற்
பாலினம் நீரினம் நீரில்லா வேரினம் படரினமுஞ்
ஜோலிய தாட்டம் வாதத்தின் முலியுஞ் சொர்ணமிதே''

கடல் சூழ்ந்த நில உலகத்திலுள்ள காடுகளில் பாலினம், நீரினம், வேரினம் ,படரினம் என்று வகைப்படுத்தப்பட்ட மூலிகைகள் 3.300 என்று கூறுகின்றனர;.இவற்றால் இத்தனை மூலிகைகளைச் சித்தர;கள் அறிந்திருந்தனர; என்றும் கருதலாம்.

*தாவரங்களில் மருத்துவம்:*

கீழ்க்காணும் பகுதியில் குப்பைமேனிஇ கரிசலாங்கண்ணி போன்ற தாவரங்களிலன் மருத்துவ பண்புகளை காணலாம்.

*குப்பைமேனியும் அதன் மருத்துவ குணங்களும்;:*

குப்பைமேனியின் தாவரவியல் பெயர் *Acaliypha indica* என்பதாகும் இது *Euphorbiceac* என்ற குடும்பத்தைச் சார்ந்தது. மேனியில் உண்டாகும் நோய்களை விரட்டுவதாலேயே இதற்கு குப்பைமேனி என்ற பெயர் ஏற்பட்டது.

'தந்த மூலப்பிணி தீத் தந்திடுபுண் சர்வவிஷ
முந்து குன்மம் வாதமுதிரமு -லந்தினவு
சூலஞ் சுவாசந் தொடர்பீந சங்கபம்போம்
ஞாலங்கொண் மேனியதனால் ''( )

என்ற பாடலில் குப்பைமேனி இலையால் தந்த மூலரோகம், தீயினால் சுட்டபுண், வயிற்றுவலி, வாதரோகம், ரத்தமூலம், நமைச்சல், குத்தல், இரைப்பு போன்ற நோய்களை குணமாக்குகின்றது.

*கரிசலாங்கண்ணி:*

'கையாந்தகரை சாறுநா லுபலம் எடுத்து
ரெண்டுபலம் குன்றி மணிப் பருப்பு கலந்துரைத்து
ஒரு பலம் எள் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி
சீலை வடிகட்டி தினம் பூசப்பா கிழவனுக்கும்
குமரன் போல் சடை காணும்''

கையாந்தரைச் சாறு நான்கு பலம் எடுத்து இஅத்துடன் இரண்டு பலம் குன்றிமணிப் பருப்பு சேரந்து அரைத்துஇ அதில் நல்லெண்ணெய் ஒரு பலம் சேர்த்து காய்ச்சி வடித்து எடுத்து தினமும்

தலையில் தேய்த்து வந்தால் முதியவர்களுக்கம் இளைஞர் போல் முடி வளருமாம் என்கிறார்அகத்தியர்.

சித்தர்களின் நவபாஷணா வைத்திய முறைகள்:

பாஷாணம் என்பது விஷம் என்று பொருள்படும். இதில் நவபாஷணம் ஒன்பது வகையான விஷங்களை, சித்தர்கள் கண்ட விதிமுறைகளைப் பயன்படுத்தி கட்டுவதாகும். இதனை சித்தர்களின் மரபறிவியல் என்றும் கூறுவர். சித்தா;கள பாஷாணங்களைக் கட்டும் போது அரைத்து வேகவைத்து, எரித்து நுண்ணிய அணுக்களாகப் பிரித்துப்புடமிடுவர். எரு,வறட்டி இவைகளைக் கொண்டு எரிக்கப்படும் தீயின் அளவினை குறிப்பிடுவது புடத்தின் வகையாகும். வறட்டியின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு அவற்றின் பெயா; குறிப்பிடப்படும். புடம் ஒன்றுக்கு ஒன்று முதல் ஆயிரம் வறட்டி வரை பயன்படுத்தப்படும்இ புடம் போடுவது என்பது சித்தர்களின் வேதியல் மரபாகும். நவபாஷணத்திலிருந்து உருவாகின்ற சூட்சுமான கதிர்வீச்சு கட்டுபவரின் மனோநிலையை மேம்படுத்துகின்ற ஒன்றாகும். நுவபாஷாணத்தால் கட்டி உருவாக்கம் தெய்வசிலைகள் நவகிரகத்தின் சக்திகளைப் பெறுகின்றது என்று சித்தா;கள் கூறியுள்ளார்கள். நவபாஷாண சிலைக்கு அபிஷேகம் செய்து அந்த அபிஷேக தீர்த்தத்தினை நாம் அருந்தினால் தீராத நோய் எதுவாயினும் தீர்ந்துவிடும் என்று சித்தர்கள் கூறியுள்ளார்கள் எனலாம்.

மரம்,செடி,கொடி, பட்டை வேர்களின் மருத்துவம்:

அருநெல்லி மரத்தின் இலை காமாலை நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது. இந்த இலையைக் கழுவி அரைத்து ஐந்து கிராம் அளவு காலை, பகல், மாலை உணவுக்கு முன் உட்கொண்டு வர வேண்டும். ஐந்து நாட்களில் காமாலை நோய் குணமடையும் உணவில் உப்பை நீக்கி உட்கொள்ள வேண்டும். பாலும் சோறும் நல்லது. அருநெல்லிக்காய் கண்பார்வைக் குறைவு நீங்கவும், உடம்பு சூடு தனியவும் மருந்தாகப் பயன்படுகிறது.
மூக்கிரட்டை கீரை கொடி வகையை சோ;ந்தவையாகும். இவை சிறுநீரக நோய்க்கு மருந்தாக பயன்படுகின்றது. துாதுவளை கீரை நுரையீரல் இளைப்புக்கும் , முருங்கைக் கீரை, இலந்தைப்பழம் , இரத்த விருத்திக்கும் , கோவைக்காய் , பாகற்காய், நாவல்கொட்டை, சக்கரை நோய்க்கும் பொன்னாங்கண்ணி கீரை துல்லிய பார்வைக்கும் பிரண்டை எலும்பு வலுவடையும் , வெள்ளத் தாமரை,இருதய வன்மைநோய்க்கும், கீழாநெல்லி, கா ிசாலைக் கீரை கல்லீரல் நோய்க்கும், ஆமணக்கு எண்ணெய், கடுக்காய் போன்ற பல எளிய மூலிகைககளின் மருத்துவ பலன்களை அகத்தியா; நூலில் சொல்லப்பட்டுள்ளன.

சைவ உணவின் மருத்துவம்:

தமிழ் இலக்கியங்களிலும் தமிழர் கீரையை உணவாக உண்டதை எடுத்து இயம்பியிருக்கின்றன. குப்பைக் கீரை, மகிழிக்கீரை, நண்டு கொழுப்புக் கீரை குமட்டிக் கீரை, போன்ற கீரை வகைகளை மண் பாத்திரத்தில் சமைத்துச் சாப்பிடுவர். இதனால் உடம்பில் வெப்பநோய் தீரும். கண் பார்வைக்கும் , ஆரோக்கியத்தியத்திற்கும் நல்லது. மலச்சிக்கலும் ஏற்படாது. எனவே இவ்வாறு இயற்கையில் கிடைக்கும் தாவர உணவுகளால் மருந்தைத் தேடிச் செல்வதற்கும் இடமில்லை. என்பதைத் தெரிந்துக் கொள்ள முடிகிறது. உடலில் உள்ள பலவகை நோய்கள் தீர்ந்து விடும் என்ற அடிப்படையில் கிராமத்து தாவரங்கள் மருந்தாகப் பயன்படுகிறது. மேலும் கிராமத்திலும் சரி, நகர் புறங்களிலும் சரி,வேப்பம்பூ ரசம்'' என்று வைப்பர். இதனால் வயிற்றில் உள்ள பூச்சிகள் இறந்து போகும் என்பதனால் இதனை உணவில் கலந்து உண்டனா;.

'ஓதரிய வேம்பை யுரைக்கிற கரமுடனே
வாதமுறுமூலக ணமாந்தம் போம் - தீதாய்
உதிரும் எரி பூச்சி குன்மம் ஓதாது ஒழுயுஞ்
சிதறாமலர் போகும் எத்தோ;;''

என்ற பாடல் வரிகள் மூலம் 'வேப்பம்பூ பூச்சிகொல்லி மருந்தாகப் பயன்பட்டது தொரியவருகின்றது.

ஊன் உணவின் மருத்துவம்:

தமிழ் மக்கள் மீன் உணவினை உண்ணும் வழக்கம் பெற்றிருந்தனா; என்பரும் அதனை உணவாக மட்டும் அல்லாது மருந்தாகவும் உட்கொள்ளும் முக்கியத்துவத்தை தொ ிந்திருந்தனா; என்பதும் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

‘சூலை கிராணி குன்மத் துட்டவதி சாரமிவை
வேலையுனவாக விடுந்தோடுஞ் - சால
ஆறாப் பசியுண்டாகும் அபத்தியமல்லாத
சுறான் கருவாடுண் பார்க்குச் சொல்’’

என்னும் மருத்துவப் பாடல்இ காய வைக்கப்பட்;ட சுறாமீன் கருவாடு பத்தியம் பொருள் என்பதுடன் இதனை உண்பவர்களுக்கு சூலைநோய்(வயிற்று உறைவு) வயிற்றுக் கடுப்புஇ கீழ்வாதம்இ குன்மம் இவயிற்றுக்கட்டி போன்ற நோய்களை குணப்படுத்தும் என்றும் கூறுகின்றது. எனவே விலங்கின் உணவும் மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை தெரிந்த கொள்ள முடிகிறது. மேலும் இம்மீன் உணவு பற்றி பதார;த்த குணசிந்தாமணி என்னும் சித்த மருத்துவநூல் மருந்தாகக் கூறுகிறது.

‘ வாதகப மறுக்கு மன்னுசீடம் போக்கும்
ஊதுகுடல் வாதம் ஒடுங்காண் - ஆதரவாய்
எல்லாப் பிணிகளும் இதமாகும் நல்ல சுறா
நல்லாரறிய நவில்’’

பழங்கால உணவு முறைகளும், இன்றைய உணவு முறைகளும்:-

பழங்காலத்தில் மக்களிடையே நீர; ஆகாரம் அதிக அளவில் பயன்படுத்தியுள்ளனர; என்பதை சித்தர; இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

வடிகஞ்சி:

சோறு வெந்த பின் வடித்து எடுக்கப்படும். கஞ்சியாகும். கண்ணிற்கு குளிர;ச்சியையும்இ பித்தநோயை போக்கும் தன்மையுடைதாகின்றது.

உறைகஞ்சி: சோறு வடித்த கஞ்சியினை நீண்ட நேரத்திற்கு வைத்திருந்தால் அது தயிர; போன்று உறைந்துவிடும். அக்கஞ்சியை பருகினால் வாதமஇ; கபம் போன்ற நோய்கள் நீங்கும்

கொதிகஞ்சி:

சோறு வேகும் நிலையில் வடித்தெடுக்கின்ற கஞ்சியாகும். இக்கஞ்சி நீர;சுருக்கை போக்கவல்லது.

முடிச்சுக்கஞ்சி:

இது பச்சைக் அரிக்கஞ்சி காய்ச்சும் போது சிறிதளவு சுக்கைத்தோல் சீவி துணியில்முடிந்து அதனுள் போட்டு நன்கு காய்ச்சி எடுப்பதாகும். இது வாதசுரம் பித்தநோய்இ மற்றும் பசியினை உண்டாக்குவனவாகும்.

நவீன மருத்துவத்தின் தாக்கமும் பின் விளைவுகளும்:

அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மருத்துவ துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன. அறுவை சிகிச்சை செய்யும்போது பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. குருதியிழப்பு, சுவாசமின்மைஇ உறுப்புகள் செயல் இழத்தல் போன்றவைகளை ஏற்படுத்துவதற்கு சாத்திய கூறுகள் உள்ளன. நவீன மருத்துவத்தில் கவனக்குறைவு ஏற்பட்டால் உயிர; நின்றுவிடும். நோய் உற்றவர் களுக்கு உடனே குருதி ஏற்ற வேண்டும். இவையே நவீன மருத்துவத்தின் தாக்கங்களும் பின் விளைவுகளும் ஆகும். மேலும் நவீன மருத்துவ முறைகள் மனித உடலுக்கு பல்வேறு பக்கவிளைவுகளும் ஏற்படுத்துகிறது.

முடிவுரை:

இன்றைய கால கட்டத்தில் நவீன மருத்துவ முறைகளும் போற்றுதலுக்குரிய ஒன்று தான். இருப்பினும் பல்லாயிரம் ஆண்டுகளாக மக்களின் கலாச்சாரத்துடன் வேரூன்றி செயல்பட்டு வருகின்ற பாரம்பரிய மூலிகை மருத்துவ முறைகளையும் போற்றுதல் வேண்டும். மேலும் தற்போது உள்ள சூழ்நிலையில் அதாவது கொரோனா காலகட்டத்தில் சித்த மருத்துவத்தின் பங்கு அளப்பறிய ஒன்று என்பது நாம் அறிந்த ஒன்றாகும். கொரோனா

தொற்றிலிருந்து நம்மை காத்துக் கொள்ள 18 வகை மூலிகைகள் கலந்த சூரணமே நிவாரணம் அளித்தது என்றால் மிகையாகாது. எனவே சித்தா;கள் எடுத்துரைத்த மூலிகைகளையும் அவற்றின் நோய் நீக்கும் முறைகளையும் சிறப்பினையும் அறிந்து இம்மருத்துவ முறையினையும் பின்பற்றுதல் நாம் அனைவருக்கும் நன்மையை உண்டாக்கும்.


மேற்கோள்கள்:

தமிழில்; மருத்துவ இலக்கியங்கள் ஓர் ஆய்வு

- முனைவர்.இ.ர.வாசுதேவன்,(பூங்கொடிபதிப்பகம்) முதற்பதிப்பு- 2012.
- தமிழில்; இயற்கை மருத்துவம் - தமிழய்யா வெளியீட்டகம்- 2005.


********* ********* ********** ********* ********* ********** ********** **********